செ.வெ.எண்: 27/2018

நாள்: 20.01.2018

<u>பத்திரிக்கை செய்தி</u>

<u>நாள்.19.01.2018</u>

ஓய்வு பெற்ற அரசு அலுவலர்களுக்கான ஓய்வூதியர் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நடத்துவது தொடர்பாக காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா, இ.ஆ.ப., அவர்களின் அறிவிப்பு

ஓய்வு பெற்ற அரசு அலுவலர்களுக்கான ஓய்வூதியர் குறை தீர்க்கும் நாள் கூட்டம் 13.02.2018 அன்று செவ்வாய்க்கிழமை அன்று காலை 10.30 மணிக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் மாநில ஓய்வூதிய இயக்குநர் அவர்களால் நடத்தப்பட உள்ளது. ஓய்வு பெற்ற அரசு அலுவலர்களுக்கு ஓய்வூதியம் தொடர்பாக குறைகள் ஏதேனும் இருப்பின் அதற்கான முறையீட்டினை மூன்று நகல்களில் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவருக்கு 30.01.2018 தேதிக்குள் அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது. இக்கூட்டத்தில் முறையீடுகளை அளிக்கும் ஓய்வு பெற்ற அரசு அலுவலர்கள் மற்றும் ஓய்வூதியதாரர் சங்கங்களின் சார்பாக ஒரு சங்கத்திற்கு ஒரு நிர்வாகி வீதம் கலந்து கொள்ளலாம். 30.01.2018-க்குள் பெறப்படும் முறையீடுகளின் மீது மட்டுமே குறைகளைவு அறிக்கையினை சம்மந்தப்பட்ட துறையிடமிருந்து பெற்று 13.02.2018 அன்று நடைபெறும் ஓய்வூதியர் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் நடவடிக்கை விவரம் தெரிவிக்கப்படும். எனவே, ஓய்வூதியர்கள் தங்களது முறையீடுகளை 30.01.2018 தேதிக்குள் மாவட்ட ஆட்சித்தலைவர் காஞ்சிபுரம் அவர்களுக்கு அனுப்பி வைக்க கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஒம்/-பா.பொன்னையா,
மாவட்ட ஆட்சித்தலைவர்,
காஞ்சிபுரம்.

/உத்தரவின்படி/

19/01/2018

மாவட்ட ஆட்சியரின்
நேர்முக உதவியாளர் (கணக்குகள்)
காஞ்சிபுரம்.

19/1/18